# True Disciple

# உண்மை சீஷன்

March - April 2018 மார்ச் - ஏப்ரல்

A Bi-Monthly News Bulletin of City Revival AG Church



*The Lord will rise up to show you compassion*

**கர்த்தர் உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்.**

*Isaiah 30 : 18 ஏசாயா*

# The Compassion of Jesus

***Rev. Dr. Jerry Daniel***

***He will rise up to show you compassion. Isaiah 30:18***

When we consider the ministry of Jesus, we cannot help but observe the compassion and mercy that flowed out of Him. "And Jesus went forth, and saw a great multitude, and was moved with compassion toward them, and he healed their sick" (Matt. 14:14). The Lord is a God of compassion and mercy: Psalm 86:15 But thou, O Lord, art a God full of compassion, and gracious, longsuffering, and plenteous in mercy and truth.

The compassion is present in every miracle Jesus performed, but in the six of them it is specifically mentioned as a factor (Matthew 14:14; 15:32; 20:34; Mark 1:41; Mark 5:19; Luke 7:13). In this message I would like to share what the compassion of Jesus can do in your life.

**1. Compassion to heal the SICK**

Jesus delivered all who came to him from every kind of sickness (Matthew 8:16; 15:30-31). His healing works were motivated by compassion and pity for the sick (Matthew 9:36; 14:14; 20:34).

On one occasion, Jesus withdrew by boat across Lake Galilee to a deserted place by himself. But the crowds got to hear of it, and followed on foot around the lake, interrupting his solitude. 'When he went ashore, he saw a great crowd; and he had compassion for them and cured their sick.' (Matthew 14:14). Instead of grudging their intrusion into his private life, he cared for them and ministered to their needs.

Jesus healed people from leprosy. Leprosy caused double suffering. First there was the physical malady itself which ate away at the victim's body. But there was also the emotional component. A leper could no longer live among family and friends. They were relegated to the fringes of society. Disease and shame were the leper's constant companions.



Instead of being anxious for his own safety and immunity, we see Jesus being willing to allow them near to him and even to touch them, as he laid hands on them and healed them. Mark describes a desperate solitary leper coming to him, begging him on his knees, 'If you choose, you can make me clean.' 'Moved with compassion, Jesus stretched out his hand and touched him, and said to him, "I do choose. Be made clean!" Immediately the leprosy left him.' (Mark 1:40-42). The man was not only healed of his dreaded disease; in the process he was loved and affirmed as a person.

Jesus cured not just to prove he was God, but because he was God abounding in love and compassion. Sick people came flocking to him because he reached out to touch every one of them. He will do the same to you today!

**2. Compassion to restore joy to the SORROWFUL**



"And when He came near the gate of the city, behold, a dead man was being carried out, the only son of his mother; and she was a widow. And a large crowd from the city was with her. When the Lord saw her, He had compassion on her and said to her, "Do not weep." Then He came and touched the open coffin, and those who carried him stood still. And He said, "Young man, I say to you, arise."So he who was dead sat up and began to speak. And He presented him to his mother. (Luke 7:12-15)

If you have ever had a loved one die, you know something of the plight of this widow woman. Her son had died, and when the Lord Jesus saw her, he had compassion on her. He knew her sorrow, He knew her tears, and His compassion caused Him to raise the woman's son from the dead.

Jesus did not wait for anyone to plead with Him in this incident. His compassion moved him to help the widow who was sorrowful and inconsolable. Yes, Sometimes, before we call for help, He answers—what a special blessing that is (Isaiah 65:24;Daniel 9:20-23). When the widow thought that all her hope was gone, she found her hope in Jesus. She got back her son alive and her joy was restored.

Jesus loves you and has compassion on you too, when you are hurting and sorrowful. Just as Jesus told the widow, he says to you "do not weep.' Trust in His great love and have faith in Him. He will do a miracle in your life also. He will turn your sorrows into joy (John 16:20). He will restore the joy and peace which you have lost for He is a God of restoration!

**3. Compassion to bring freedom for the SUFFERING**

A father brought his suffering, demon-possessed son to Jesus. He had seizures and was suffering terribly. The father described how this had happened often since childhood. Then he cried out to Jesus: "Have compassion on us!" Jesus was moved with great compassion for the father and his devil-possessed son (Mark 9:17-27). Jesus rebuked the demon, and the demon came out of him, and the boy was cured instantly.



There was another man who was sorely afflicted because he was possessed with a legion of devils. The man was in an awful condition. He wore no clothes. He lived in the tombs. He abused his body. He cut himself with stones and was always crying out in the night. Jesus, out of compassion, met this man and commanded the unclean spirits to come out of him. Then he was totally changed. Jesus set him free from all his sufferings (Mark 5:1-20)

Satan wants to kill, to steal and to destroy but Jesus wants to give you abundant life and freedom (John 10:10). Are you suffering from demonic oppression, financial losses, and family issues? Give your life to Jesus. He will set you free from your affliction and anguish.

**4. Compassion to forgive the SINNERS**

Jesus' compassion was not confined to cases of physical need or suffering. He earned the nickname 'friend of sinners' because of his tenderness towards those who were ostracized from respectable society or burdened with moral failure. Matthew and Zacchaeus owed their conversion to Jesus' personal invitation to follow him, when they were working as despised tax collectors (Matthew 9:9-13; Luke 19:1-10). Jesus had compassion on them and transformed their lives by forgiving their sins.



Once the religious leaders of Jesus' day brought a woman caught in adultery to Jesus in the temple, challenging him to uphold the law of Moses, which sanctioned stoning to death for this offence (Leviticus 20:10, Deuteronomy 22:22). Jesus didn't reply, but bent down to write on the ground. 'Let anyone among you who is without sin be the first to throw a stone at her', he said to the proud men gathered around to condemn her. One by one they slunk away, leaving only Jesus and the woman. Then he straightened up and said, 'Woman, where are they? Has no one condemned you? She said, 'No one, sir.' Jesus replied, 'Neither do I condemn you. Go your way, and from now on do not sin again.' (John 8:2-11)

This woman's life was not only wrecked by her sin, but she was also forced to endure public shame as well. Yet in spite of this woman's wicked and lurid past, Jesus extended compassion to her. That's not to say that He condoned her wickedness. He didn't. But in His matchless wisdom, Jesus knew this woman didn't need another critic; she needed someone who cared. Yes, Jesus cares for you. He will not condemn you. He wants to give you a brand new life.

If Jesus was moved with compassion then, he is still moved with compassion today, because he has not changed (Heb 13:8). If he had compassion on the sick, sorrowful and suffering in his earthly ministry, he has compassion on you today if you are in the same condition. Today he is your "merciful and faithful high priest" (Heb 2:17)

The ultimate act of his compassion can be seen at Calvary where He willingly laid down his life for our sins. My dear friend, come to Jesus and experience his compassion. He will never turn away anyone who comes to him (John 6:37). He loves you and wants you to come to him, confessing you are a sinner in need of forgiveness. He will forgive your sins, bless you and give you a new start in your life! God Bless You!

# DECLARE A HOLY FAST

Declare a holy fast, call a sacred assembly. Joel 2:15

## I. REASONS FOR FASTING

**Biblical Reasons:** Nowhere in scripture is fasting explicitly com-manded. However, it is an assumed practice in scripture, being men-tioned in 59 contexts with the words appearing nearly 80 times. Further, fasting is a discipline that Jesus assumed His disciples would practice and about which He taught them (Matt.6:16-18;9:14-15). As a Jew, Jesus Himself practiced fasting (Matt.4:1-2;Luke 4:1-2). The NT church also fasted on occasion, as we see in Acts13:1-3 and24:13).

**Historical Reasons:** After the NT era, the early church fathers practiced fasting regularly usually on wednesdays and Fridays. Christian tradition has been to fast during the Lenten season. and, in some traditions , the Advent season.

**Practical Reason:** Fasting is good for a person, both spiritually and physically. Spiritual benefits include a strong communion with God through His word and prayer, clarity in hearing from God , a reminder of our dependence on God, identification of sin in our lives, and identification with the truly poor and needy. Physically, fasting can provide a cleansing of bodily toxins, higher energy levels, a better sleep schedule and quality , mental focus , emotional stability ,and weight loss.

## II. PURPOSES OF FASTING

**1. Fasting is an aid to prayer :** Prayer is almost always tied to fasting in scripture. However, not all prayer mandates fasting. said another way, all fasting involves prayer, but not all prayer involves fasting. Jer. 14:12 indicates that one should pray while they fast. The point of fasting is to earnestly seek God, which we do through prayer. Fasting seems to be given to "strengthen prayer".

**2. Fasting is an expression of repentance and seeking forgiveness :** Fasting can be a time of confession and cleansing (1Jn.1:9) to restore us to right fellowship and effectiveness before God.

**3. Fasting is an expression of worship and devotion :** Fasting can be undertaken as an act of pure devotion to and worship of God by both individuals and groups of worships. Anna served the in the temple by fasting and praying

(Luke 2:37). similarly, in the OT the Jewish fasts were corporate fasts (Est.9:31; Zech.7:5 ) and in the NT the early church was "ministering to the Lord and fasting" (Acts 13:2).

**4. Fasting is a means of seeking God' s guidance and help :** Often in the OT Israel would fast and pray to seek guidance from God as to what they should do in a given situation (e.g Judges 20:18-28). some decisions and situations in life can be especially crucial and challenging; during those times we sense strongly the need for God' s help to succeed, protection, or blessing. A way to express that dependence is through fasting and praying. Ezra fasted for the safe return of the exiles (Ez.8:21ff.) and Esther and Nehemiah fasted to ask God"s favor with king (Est.4;Neh.1:4-11).

**5. Fasting is a means of preparation for ministry :** Ministry is a serious task and should be entered accordingly. In Scripture we see examples of fasting accompanying ministry from start to finish, such as preparing to hear the word of God (Jer.36:9-10), Jesus' preparation for the work of God (Matt.4:1-2), special consecration to the work of God (Acts 13:1-3;14:23), and maintaining purity in doing the work of God (1ki13:8).

## A Different Approach to Fasting

Fasts have a tendency to be oriented toward things like giving up food. But there are many other creative ways we can welcome Jesus' healing touch this Fasting days. Below are some suggestions you may want to consider.

1. Fast from anger and hatred. Give your family an extra dose of love each day.
2. Fast from judging others. Before making judgments, recall how Jesus overlooks our faults.
3. Fast from discouragement. Hold on to Jesus' promise that he has a perfect plan for your life (Jeremiah. 29:11).
4. Fast from complaining. When you find yourself about to complain, close your eyes and recall some of the little moments of joy Jesus has given you.
5. Fast from resentment or bitterness. Work on forgiving those who may have hurt you.
6. Fast from spending too much money. Try to reduce your spending by ten percent and give these savings to the poor.

# THE PRECIOUS BLOOD OF JESUS

The blood of Jesus Christ is such a precious thing. The blood of Jesus Christ is a precious thing because it can wash you white as snow. In this message, I want to point out at least 10 reasons why the blood of Jesus Christ is so precious:

1. Our sins are forgiven and we are redeemed by the blood of Jesus (I Peter 1:18-19; Col. 1:14; Eph. 1:7; Heb. 9:12)
2. We who were far away from God are brought near to Him by the blood of Jesus (Ephesians 2:11-13)
3. Our sins are washed away by the blood of Jesus (1 John 1:7; Rev.1:5)
4. We are made priests and kings before God by the blood of Jesus (Rev. 1:5)
5. We have peace with God by the blood of Jesus (Colossians 1:20)
6. We overcome Satan by the blood of Jesus (Revelation 12:9-11)
7. Our conscience is cleansed from dead works to serve the living God by the blood of Jesus (Heb. 9:14).
8. We enter the most holy place with boldness by the blood of Jesus (Heb. 10:19, 20).
9. We are made complete for every good work by the blood of the eternal covenant (Heb. 13:20-21).
10. We are justified and saved from the wrath of God by the blood of Jesus (Romans 5:9)

# 21 DAYS FASTING PRAYER

# 21 நாட்கள் உபவாச ஜெபம்

**மார்ச்**

**11 ஞாயிறு முதல்**

**31 சனி வரை**



தினமும் காலை 10.30 மணி முதல்
12.30 மணி வரை
சபையில் வைத்து
சிறப்பு ஜெபம் நடைபெறும்.

தினமும் மாலை 7.00 மணி முதல்
8.30 மணி வரை திருச்சியின்
14 இடங்களில்
உபவாச ஜெபம் நடைபெறும்.

# SIGNS OF MATURE CHRISTIANS

- They speak the truth at all times
- They are good listeners
- They hardly take offense
- They are quick to forgive
- They are reliable
- They are supportive
- They have appetite for prayer and fasting
- They rely on the Word of God
- The more God lifts them up, the more they become humble
- They hardly defend themselves
- They are quick to repent
- They seek peace and pursue it
- They love people and they are compassionate
- They know when to talk and when to be quiet
- They are full of wisdom in many aspects of life
- They respect people and are very sensitive to people's feelings
- They have a lot of patience and they are not short tempered
- They fear God
- They give honor where it is due
- They are content with what they have
- They have good leadership skills
- They are hospitable
- They are not carried away by all kinds of teachings
- They have a sacrificial spirit
- They don't gossip and look down on people
- They have faith
- They take part in church activities and attend church regularly
- They are clean in every aspect of life
- Their spirits are sensitive, they hate sin
- They don't act holier than others
- They don't compete with others

**Ask yourself : Am I a matured Christian?**

**May God give us the grace to identify and work on our weak areas.**

## "Operation Andrew"

"Operation Andrew" is a time-proven process of prayer and outreach in which Christians of all ages cultivate skills to guide their families and friends to a personal relationship with Jesus Christ.

*"One of the two which heard John speak, and followed him, was Andrew, Simon Peter's brother. He first found his own brother Simon, and said unto him, We have found the Messiah, which is, being interpreted, the Christ. And he brought him to Jesus" (John 1:40-42a).*

**Look Around**

Individuals around you, family members, children, co-workers, neighbors, school mates and others – this is your mission field. List names of individuals you know who need Jesus Christ, whom you will pray for regularly.

**Look Up**

Because God changes people through prayer. Pray each day for those on your list, that God will give you opportunities to share His love with them.

**Look Out**

For ways to cultivate friendships with each person on your list. Spend time with them. An invitation to dinner or a special occasion will build friendships, which can open the way to talk about Christ.

**Look Forward**

By beginning to talk with each person on your list about attending a church service with you. Pray, invite and bring them.

**Look After**

Those who respond to Christ or even begin to show interest in the Gospel, for they need your encouragement. Continue to love and pray for those who do not respond.

***"He who wins souls is wise" (Proverbs 11:30b).***


# சிறப்பு ஆண்கள் ஐக்கிய கூடுகை

# SPECIAL MEN'S GET-TOGETHER

**ஏப்ரல் 14, சனிக்கிழமை**
**காலை 10.00 மணி முதல்**
**3.00 மணி வரை**

**இடம் :**
**ஷாலோம் கார்டன்,**
**மணிகண்டம், திருச்சி – 12**

## ஆண்கள் ஐக்கியம் - Men's Fellowship



3வது
திங்கட்கிழமை
மாலை 7.00 மணி

திருச்சபையிலுள்ள
அனைத்து ஆண்களும்
பங்குபெறும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

## வாலிபர் ஐக்கியம் - Youth Fellowship

I & III ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.30 மணி முதல்
6.00 மணி வரை



திருச்சபையிலுள்ள
அனைத்து வாலிபர்களும்
பங்குபெறும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

*தசமபாகம், காணிக்கைகள் & நன்கொடைகளை*
*கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.*

## Your Offerings and Donations Can Be Sent to

**Account Name: City Revival AG Church**
**Account Number: 35354599169**
**Bank Name: State Bank of India**
**IFSC Code: SBIN0000930**
**Branch Code & Address: 00930**
**Tiruchirappalli Main Branch,**
**7, MacDonalds Road, Cantonment, Trichy – 620 001**

Kindly intimate us through email or sms immediately
after you have sent your offering through bank transfer so that
we can confirm the receipt of your offering.



## VBS 2018

**ஏப்ரல் 30 திங்கள் முதல்**
**மே 5 சனி வரை**



# இயேசுவின் மனதுருக்கம்

பாஸ்டர். **ஜெரி டேனியல்**

*கர்த்தர் உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார். ஏசாயா 30:18*

ஆண்டவராகிய இயேசு மனதுருக்கமுள்ள தெய்வம். அவர் இந்த உலகில் வாழ்ந்த நாட்களில், 'திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்' (மத்தேயு 14 : 14). அவர் மனதுருக்கமும், இரக்கமும் மேலும் பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன் " என்று வேதம் கூறுகிறது (சங்கீதம் 86 : 15). இயேசுவின் மனதுருக்கம் உங்கள் வாழ்வில் கொண்டுவரும் சில ஆசீர்வாதங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## 1. வியாதியிலிருந்து சுகம் தரும் மனதுருக்கம். (Compassion for the Sick)



இயேசு தம்மிடத்தில் வந்த பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். (மத். 8 : 1, 15 : 30, 30,31) வியாதியஸ்தர்கள்மேல் அவருக்கிருந்த இரக்கமும் மனதுருக்கமும் அவர்களுக்கு சுகத்தைக் கொண்டு வந்தது. (மத். 9 : 35, 14 : 14, 20 : 34). ஒருமுறை வனாந்தரமான ஓர் இடத்திற்குத் தனியே போனார். ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள். அதைக் கண்ட அவர் அவர்கள்மேல் மனதுருகி அவர்களுடைய வியாதிகளை சுகமாக்கினார். (மத் 14 : 13, 14). தன்னை தொந்தரவு செய்வதாக நினையாமல், அவர்கள்மேல் கரிசனையுள்ளவராய் அவர்களுக்கு அற்புதம் செய்தார்.

ஒருமுறை ஒரு குஷ்டரோகியைக் கண்டு அவன்மேல் மனதுருகி அவனை சுகப்படுத்தினார். அந்நாட்களில் குஷ்டரோகம் ஒரு மனிதனுக்கு இரண்டு விதத்தில் வேதனையைக் கொண்டு வந்தது. முதலாவது சரீரத்தில் காணப்பட்ட வலி வேதனை.

இரண்டாவது அவன் குடும்பத்தோடும் நண்பர்களோடும் சேர்ந்து வாழ முடியாத ஒரு வேதனை. வெட்கமும், வேதனையும் அவன் தோழர்களாய் இருந்தன. இப்படிப்பட்ட ஒருவனை இயேசு தொட்டு அவன்மேல் மனதுருகி, அவனுடைய கொடூரமான வியாதியை சுகமாக்கினார். இயேசுவின் மனதுருக்கம் இன்றும் மாறாதது. இன்றும் இயேசு உங்களைத் தொட்டு சுகமாக்குவார்.அவருடைய மனதுருக்கம் உங்களுக்கு சுகத்தைக் கொண்டுவரும்.

## 2. துயரத்தைப் போக்கி சந்தோஷம் தரும் மனதுருக்கம்
(Compassion for the Sorrowful)



"இயேசு நாயீன் என்னும் ஊரின் வாசலுக்கு சமீபித்தப்போது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள் ; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாய் இருந்தான். அவளோ விதவையாயிருந்தாள் ; ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனே கூட வந்தார்கள். இயேசு அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி : "அழாதே " என்று சொல்லி, கிட்ட வந்து, பாடையைத் தொட்டார் ; அதை சுமந்தவர்கள் நின்றார்கள் ; அப்பொழுது அவர் : "வாலிபனே, எழுந்திரு" என்று உனக்கு சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்." (லூக்கா 7 : 12 – 15)

நமக்கு நெருங்கியவர்கள் மரிக்கும்போது நம்முடைய வாழ்க்கையில் துக்கம் நம்மை வாட்டுகிறது. இந்த சமயத்தில் கணவனை இழந்த ஒரு விதவையின் ஒரே மகனும் மரித்துப் போகிறான். எதிர்காலமே இருண்ட நிலை! துக்கத்தில் தவிக்கிறாள்! இந்த சூழ்நிலையில் இயேசு அவர்களுக்கு எதிர்ப்பட்டு அவளுடைய துக்கத்தை அறிந்து, அவளுடையக் கண்ணீரைக் கண்டு அவள் மேல் மனதுருகி அவளுக்கு ஒரு அற்புதம் செய்கிறார்.

இந்த சம்பவத்தில் யாருமே அவரிடம் அற்புதத்தை வேண்டிக் கேட்கவில்லை. அவருடைய மனதுருக்கம் துயரத்தின் உச்சக்கட்டத்தில் இருந்த அவளுக்கு உதவி செய்ய அவரைத் தூண்டியது. அவளை " அழாதே " என்று சொல்லி ஆறுதல் படுத்தினார். மரித்த அவளுடைய மகனை உயிரோடு எழுப்பி அவளுக்குத் திரும்ப கொடுத்து அவளை மகிழ்ச்சியாக்கினார்.

ஆம், இயேசுவின் மனதுருக்கம் உன் துக்கத்தை சந்தோஷமாக மாற்றும்! இழந்துபோன உன் நம்பிக்கை, சமாதானம், ஆசீர்வாதங்களை உனக்குத் திரும்பப் பெற்றுத் தரும்!

## 3. வேதனையிலிருந்து விடுதலை தரும் மனதுருக்கம்
(Compassion for the Suffering)



ஒரு முறை ஒரு தகப்பன் அசுத்த ஆவி பிடித்த தன் மகனை இயேசுவிடத்தில் கொண்டு வந்தார். தன்னுடைய மகனுக்கு இந்தப் பிரச்சனை சிறு வயது முதற்கொண்டு இருப்பதாகவும், அசுத்த ஆவி தன் மகனைக் கொல்லும்படி அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் அவனை தள்ளுவதாகவும் வேதனையோடு விவரித்து இயேசுவிடம் கூறினார். மேலும் அவர் இயேசுவைப் பார்த்து, "நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதுருகி, எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று மன்றாடினார். இயேசு அவர்மேல் மனதிரங்கி, அந்த அசுத்த ஆவியை அதட்டினார். அது உடனே அவனைவிட்டு நீங்கியது. அவன் பூரண விடுதலைப் பெற்றான். (மாற்கு 9:17 - 27)

இன்னொரு மனிதன் அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன். பிரேதக் கல்லறைகளிலிருந்து இயேசுக்கு எதிரே வந்தான். அவனுடைய நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது. வஸ்திரமில்லாமல், கல்லுகளினால் தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். இயேசு அவன்மேல் மனதுருகி, அவனுக்குள்ளாக இருந்த ஆறாயிரம் பிசாசுகளை அவனை விட்டுத் துரத்தி, அவனுக்கு பரிபூரண விடுதலை அளித்தார். அவன் வாழ்க்கை முற்றிலும் மாறியது. அவனுடைய வேதனையிலிருந்து இயேசு அவனுக்கு நிரந்தர விடுதலை அளித்து, அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற்றினார். (மாற்கு 5:1 - 20)

பிசாசு கொல்லவும் அழிக்கவும் திருடவும் வருகிறான். ஆனால் இயேசுவோ நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தார். (யோவான் 10 : 10) உங்கள் வாழ்வில் உபத்திரவமா? வேதனையா? கண்ணீரா? குடும்பப் பிரச்சனையா? இயேசுவிடம் வாருங்கள். இயேசு உங்கள்மேல் மனதுருகி, உங்கள் வேதனையை நீக்கி, உங்களை ஆசீர்வதிப்பார்.

## 4. பாவங்களை மன்னிக்கும் மனதுருக்கம் (Compassion for the Sinners)

இயேசுவின் மனதுருக்கம் சரீர சுகத்தையும் விடுதலையையும் மாத்திரமல்ல. நம்முடைய பாவங்களையும் மன்னித்து நம்மை ஆசீர்வதிக்கும். இயேசு பாவிகளின் சிநேகிதர் என்று அழைக்கப்பட்டார். (மத்தேயு 11 : 19) சமுதாயத்தில் பாவிகளாக எண்ணப்பட்ட



மத்தேயு, சகேயு போன்ற வரிவசூலிக்கிறவர்களை இயேசு அழைத்து அவர்கள் பாவங்களை மன்னித்து, புது வாழ்வை அளித்தார். (மத்தேயு 9 : 9 – 13 ; லூக்கா 19 : 1 – 10)

ஒரு முறை விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை மதத் தலைவர்கள் இயேசுவிடம் கொணடு நிறுத்தி அவளை கல்லெறிந்து கொல்ல உத்தரவு கேட்டார்கள். ஏனெனில், மோசேயின் நியாயப்பிரமானத்தில் அப்படி எழுதியிருந்தது (லேவி 20 : 10). இயேசு அவர்களைப் பார்த்து, " உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் " என்று சொன்னார். அதைக் கேட்டவர்கள் மனசாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு, அனைவரும் போய்விட்டார்கள். இயேசு தனியே நின்ற அவளைப் பார்த்து, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ, இனி பாவம் செய்யாதே " என்றார்.

ஆம், அருமையானவர்களே, உங்களுடைய கடந்த கால பாவமான, வெட்கமான வாழ்க்கையை இயேசு மாற்ற முடியும். உங்கள்மேல் மனதுருக்கமுள்ள இயேசு உங்கள் பாவங்களை அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவி உங்களை அவருடைய பிள்ளையாக மாற்றுவார். ஒரு புதிய வாழ்வைத் தருவார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் (எபி 13 : 8). அவரிடத்தில் வருகிற ஒருவரையும் அவர் புறம்பே தள்ளுவதில்லை. (யோவான் 6 : 37 ). இயேசு உங்களை நேசிக்கிறார். அவரிடத்தில் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அவர் தரும் பாவ மன்னிப்பு, சுகம், விடுதலை, சந்தோஷம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்! இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக!




# BIBLE STUDY
## வேதப்பாடம்

ஒவ்வொரு ஞாயிறு
மாலை 6.30 மணிக்கு

**Every Sunday @ 6.30 p.m**

தலைப்பு : **இயேசு கிறிஸ்துவின் போதனைகள்**
Topic : **The Teachings of Jesus Christ**

"நான் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி
அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத்தேயு 28 : 20)

# இசைப் பயிற்சி வகுப்புகள்

இடம் : **சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச்**
ஜென்னி பிளாசா, திருச்சி – 1.

Guitar, Keyboard,
Rhythm Pad
& Drums

**செவ்வாய் தோறும் மாலை 6.00 மணி முதல் 8.15 மணி வரை**

# உபவாசத்தின் காரணங்களும், நோக்கங்களும்

"பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்".
யோவேல் 2:15

## உபவாசத்தின் காரணங்கள்

**வேதாகமக் காரணங்கள் :** வேதத்தின் எந்த ஒரு பகுதியிலும் உபவாசம் கட்டளையாகக் கூறப்படவில்லை. இருப்பினும் வேதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சியாக காணப்படுகிறது. உபவாசம் என்கிற வார்த்தை 59 சந்தர்ப்பங்களில் 80 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், உபவாசம் பண்ண வேண்டும் என்ற ஒழுங்கை இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்தார் (மத்தேயு 6:16, 18:9; 14-15). ஒரு யூதனாக இயேசு தாமே உபவாசத்தைக் கடைபிடித்தார் (மத்தேயு 4:12; லூக்கா 4:1,2). புதிய ஏற்பாட்டுச் சபையார் உபவாசித்தார்கள் (அப்போஸ்தலர் 13:1-3; 24:13)

**வரலாற்றுக் காரணங்கள் :** ஆதி சபைப் பிதாக்கள் புதன், வெள்ளி ஆகிய நாட்களில் உபவாசம் இருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். கிறிஸ்தவப் பாரம்பரியம், லெந்து நாட்களில் உபவாசத்தைக் கடைபிடிக்கின்றது.

**நடைமுறைக் காரணங்கள் :** ஒரு தனி நபருடைய சரீரத்திற்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் உபவாசமிருப்பது நல்லது. ஆவிக்குரிய நன்மை என்னவெனில் தேவனோடு உள்ள நமது உறவு பெலப்படுகிறது. சரீரத்தின் தேவையற்ற எடையைக் குறைக்க உதவுகிறது. மனநிலையை சீஷராக்குகிறது.

## உபவாசத்தின் நோக்கங்கள்

**1. உபவாசம் ஜெபத்திற்கு உதவியாக இருக்கிறது.**

வேதத்தில் ஜெபம் எப்பொழுதும் உபவாசத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இன்னொரு விதத்தில் சொன்னால் எல்லா உபவாசங்களும் ஜெபத்தை உள்ளடக்கியுள்ளது. ஆனால் எல்லா ஜெபங்களிலும் உபவாசம் உள்ளடங்கவில்லை. எரேமியா 14:12ல் உபவாசமிருந்தால் ஜெபிக்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. உபவாசத்தின் நோக்கம் ஜெபத்தின் மூலம் ஊக்கமாக ஆர்வத்தோடு தேவனைத் தேடுவதாகும். உபவாசம் ஜெபத்திற்கு வலுவூட்டுகிறது.

**2. மனந்திரும்புதலையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்வதற்கு உபவாசம் தேவை.**

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா நியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9)

**3. உபவாசம் ஆராதனைக்கும், தியானத்திற்கும் உதவியாயிருக்கிறது.**

அன்னாள் என்கிற விதவை தேவாலயத்தில் இரவும், பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள் (லூக்கா 2:37). பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், யூத ஜனங்கள் கூட்டமாக உபவாசமிருந்தனர் (எஸ்றா 9:31; சகரியா 7:5). ஆதி சபையார் உபவாசித்து, ஆராதனை செய்தனர் (அப்போஸ்தலர் 13:2).

**4. தேவனுடைய உதவியையும், வழி நடத்துதலையும் தேடுவதற்கு உபவாசம் காரணமாயிருக்கிறது.**

இஸ்ரவேல் ஜனங்கள் தாங்கள் நெருக்கப்பட்ட சூழ்நிலைகளில் உபவாசத்தோடும், ஜெபத்தோடும் தேவனுடைய உதவியை நாடினர் (நியாயாதிபதிகள் 20:18-28). எஸ்றா சிறையிருப்பில் இருந்த தனது ஜனங்கள் பாதுகாப்போடு தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வரும்படி உபவாசித்து ஜெபித்தான் (எஸ்றா 8:21-23). எஸ்தர், நெகேமியா போன்றவர்கள் ராஜாக்களுடைய தயவு தங்களுக்குக் கிடைக்கும்படி உபவாசித்தனர். (எஸ்தர் 4, நெகேமியா 1:4-11).


**5. ஊழியத்தின் ஆயத்தத்திற்கு உபவாசம் அவசியமாயிருக்கிறது.**

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க உபவாசத்தோடு கூடிய ஆயத்தம் தேவை (எரேமியா 36:9,10). இயேசு தமது ஊழியத்தை ஆரம்பிக்கும் முன் உபவாசமிருந்தார். (மத்தேயு 4:12). ஆதி சபையார் உபவாசித்து ஜெபிக்கும்போது பவுலும், பர்னபாவும் விசேஷித்த ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 13:1-3; 14:23).

**உபவாச நாட்களில் என்ன செய்ய வேண்டும்?**

அநேக நாட்கள் உபவாசமிருக்கும்போது வீணான வேலைப்பளுவைக் குறைக்க வேண்டும். ஜெபத்திலும், வேத வசன தியானத்திலும் நேரத்தைச் செலவிட வேண்டும். பழ வகைகள், காய்கறிகள் சரீரம் பலவீனமடையாமல் இருப்பதறகு எடுத்துக்கொள்ளலாம். உபவாசம் இருக்கும்போது சோதனைகள் வரும். அவைகளை இயேசுவின் நாமத்தில் நாம் மேற்கொள்ள வேண்டும். உபவாசம் இருப்பது ஆவிக்குரிய நோக்கமாகும். அதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

## GOOD FRIDAY SERVICE



## பெரிய வெள்ளி ஆராதனை

**மார்ச் 30, வெள்ளிக்கிழமை**

## RESURRECTION SUNDAY SERVICE

## உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனை




**ஏப்ரல் 1, ஞாயிற்றுக்கிழமை**

## இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் ஆசீர்வாதங்கள்

1. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு மீட்பும் பாவ மன்னிப்பும் கிடைக்கிறது (1 பேதுரு 1:18,19; கொலோ. 1:14; எபே. 1:7; எபி. 9:12).
2. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு சமீபமாகிறோம் (எபே. 2:11-13).
3. இயேசுவின் இரத்தம் நம்மை பாவங்களறக் கழுவி சுத்திகரிக்கிறது (வெளி. 1:5; 1 யோவான் 1:7).
4. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கப்படுகிறோம் (வெளி. 1:5).
5. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு சமாதானம் உண்டாகிறது (கொலோ. 1:20).
6. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளி. 12:11).
7. இயேசுவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனச்சாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கிறது (எபி. 9:14).
8. இயேசுவின் இரத்தம் தேவனுடைய பரிசுத்த சந்நிதிக்குள் பிரவேசிப்பதற்கு நமக்கு தைரியத்தை கொடுக்கிறது (எபி. 10:19,20).
9. இயேசுவின் நித்திய உடன்படிக்கையின் இரத்தம் நம்மை சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குகிறது (எபி. 13:20,21).
10. இயேசுவின் இரத்தம் நம்மை நீதிமான்களாக மாற்றி, தேவனுடைய கோபாக்கினைக்கு நீக்கி நம்மை இரட்சிக்கிறது (ரோமர் 5:9).

## சிலுவையில் மலர்ந்த 7 பூக்கள்

| | | |
|---|---|---|
| 1. மன்னிப்பு | - | லூக்கா 23 : 34 |
| 2. இரட்சிப்பு | - | லூக்கா 23 : 43 |
| 3. அரவணைப்பு (அன்பு) | - | யோவான் 19 : 26, 27 |
| 4. தத்தளிப்பு | - | மத்தேயு 27 : 46 |
| 5. தவிப்பு | - | யோவான் 19 : 28 |
| 6. பூரிப்பு | - | யோவான் 19 : 30 |
| 7. ஒப்புவிப்பு | - | லூக்கா 23 : 46 |

# முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவர்களின் அடையாளங்கள்

- அவர்கள் எப்போதும் உண்மையே பேசுபவர்கள்.
- அவர்கள் நன்றாக கவனிக்கும் திறன் உள்ளவர்கள் .
- எளிதில் கோபமடையமாட்டார்கள்.
- உடனே மன்னிக்கும் தன்மை உடையவர்கள்.
- நம்பகத்தன்மை உடையவர்கள்.
- பிறருக்கு உதவுபவர்கள்.
- ஜெபிப்பதற்கும் உபவாசம் இருப்பதற்கும் பசி தாகமுடையவர்கள்.
- கர்த்தரின் வார்த்தையை (சார்ந்திருப்பவர்கள்) முற்றிலும் நம்புபவர்கள்
- தேவன் உயர்த்தும் போதெல்லாம் தங்களைத் தாழ்த்திக் கொள்பவர்கள்.
- தங்களுக்காக வாதாடமாட்டார்கள்.
- தவறை உணர்ந்ததும் உடனே மனம் திரும்புபவர்கள்.
- சமாதானத்தைத் தேடி கண்டடைபவர்கள்.
- மக்களை நேசிப்பவர்கள்; இரக்க குணமுடையவர்கள்.
- எப்போது பேசவேண்டும் எப்போது அமைதி காக்க வேண்டும் என்பதை அறிந்தவர்கள்.
- வாழ்வின் பல்வேறு துறைகளிலும் ஞானம் நிறைந்தவர்கள்.
- மக்களை மதிப்போடு அவர்களின் உணர்வுகளைப் புரிந்து நடப்பவர்கள்.
- அவர்கள் முன்கோபியாய் இராமல் மிகவும் பொறுமையுடன் இருப்பவர்கள்.
- தெய்வ பயம் உடையவர்கள்.
- கனம் பண்ண வேண்டியவற்றிற்கு கனம் பண்ணுபவர்கள்.
- தங்களிடம் உள்ளதைக் கொண்டு திருப்தி அடைபவர்கள்.
- தலைமைத்துவ திறமைகளை உடையவர்கள்.
- விருந்தினர்களை நன்கு உபசரிப்பவர்கள்.
- அர்ப்பணிப்பின் ஆவியை உடையவர்கள்.
- தவறான உபதேசங்களுக்கு ஏமாறாதவர்கள்.
- மற்றவர்களை அற்பமாய் எண்ணாதவர்களாயும், வீண் வதந்திகளைப் பரப்புபவர்களாக இருக்கமாட்டார்கள்.
- விசுவாசமுடையவர்கள்.
- சபை காரியங்களில் ஈடுபடுவதோடு தவறாமல் சபைக்குச் செல்பவர்கள்.
- வாழ்க்கையின் எல்லாப் பகுதியிலும் தூய்மையாய் இருப்பார்கள்.
- உணர்வுள்ள ஆவியை உடையவர்களாய் பாவத்தை வெறுப்பவர்கள்.
- மற்றவர்களை விட தாங்கள் பரிசுத்தவான்கள் போன்று நடந்து கொள்ளமாட்டார்கள்.
- மற்றவர்களோடு போட்டி போடமாட்டார்கள்.

***உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்! ... நான் ஒரு முதிர்ச்சி பெற்ற கிறிஸ்துவனா ?***
***நம் பலவீனங்களை கண்டறிந்து அவற்றை சரி செய்ய தேவன்தாமே கிருபை தருவாராக!***

மொழியாக்கம் சகோ. **இம்மானுவேல்**

# ‘‘அந்திரேயா ஊழியம்’’

‘‘அந்திரேயா ஊழியம்’’ என்பது எக்காலத்திலுமுள்ள கிறிஸ்தவர்கள் தங்களுடைய குடும்பங்கள் மற்றும் நண்பர்களை இயேசு கிறிஸ்துவுடன் ஒரு தனிப்பட்ட உறவிற்கு வழிநடத்தக்கூடிய திறமைகளை வளர்த்துக்கொள்ள உதவும் காலத்தால் நிரூபிக்கப்பட்ட ஜெபம் மற்றும் ஊழிய செய்முறையாகும்.

**“யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப்பின் சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்: மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம். பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டி கொண்டு வந்தான்.” (யோவான் 1:40 – 42)**

**சுற்றிலும் பாருங்கள்**

உங்களைச் சுற்றியுள்ள தனி மனிதர்கள், குடும்ப அங்கத்தினர்கள், குழந்தைகள் உடன் வேலை செய்பவர்கள், அயலகத்தார், பள்ளி நண்பர்கள் மற்றும் பலர் – இதுவே உங்கள் ஊழிய ஸ்தலம் ஆகும். உங்களுக்குத் தெரிந்த நீங்கள் தொடர்ந்து ஜெபிக்கக்கூடிய இயேசுவை அறிவிக்கத் தேவையுள்ள நபர்களுடைய பெயர்களை எழுதுங்கள்.

**மேலே பாருங்கள்**

ஏனெனில் தேவன் ஜெபத்தின் மூலம் ஜனங்களை மாற்றுகிறார். அவர்களுடன் தேவனுடைய அன்பைப் பகிர்ந்து கொள்ளும்படியான வாய்ப்பை உங்களுக்கு கொடுக்கும்படியாக, நீங்கள் பெயர் எழுதி வைத்துள்ளவர்களுக்காக ஒவ்வொரு நாளும் ஜெபியுங்கள்.

**வெளியே பாருங்கள்**

நீங்கள் பெயர் எழுதி வைத்துள்ள நபர்களுடன் நட்பை வளர்க்கும்படியான வாய்ப்புகளுக்காக அவர்களுடன் நேரம் செலவிடுங்கள். கிறிஸ்துவைப் பற்றி பேசும்படியான வாய்ப்பை உருவாக்க, நட்பைக் கட்டியெழுப்பும்படியாக ஒரு விருந்திற்கோ அல்லது விசேஷ நிகழ்ச்சிக்கோ அழைப்புக் கொடுங்கள்.

**முன்னே பாருங்கள்**

நீங்கள் பெயர் எழுதி வைத்துள்ள நபர்கள் ஒவ்வொருவருடனும் உங்களுடன் ஒரு சபை ஆராதனையில் கலந்து கொள்வதைப் பற்றிப் பேச ஆரம்பியுங்கள். ஜெபித்து, அழைத்துக் கொண்டு வாருங்கள்.

**தொடர்ந்து பாருங்கள்**

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் அல்லது சுவிசேஷத்தில் ஆர்வம் காட்டுபவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது அவசியம். நிராகரிக்கிறவர்களுக்காகவும் தொடர்ந்து அன்புபாராட்டி ஜெபியுங்கள்.

**“... ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்கிறவன் ஞானமுள்ளவன்”**

(நீதி. 11:30)

| GOALS FOR 2018 | | 2018 சபை இலக்குகள் |
|---|---|---|
| 100 | - New Families | 100 - புதிய குடும்பங்கள் |
| 100 | - Baptism | 100 - ஞானஸ்நானம் |
| 100 | - Holy Spirit Baptism | 100 - பரிசுத்த ஆவி அபிஷேகம் |
| 1 | - New Village Church | 1 - புதிய கிராம சபை |
| 20 | - New Leaders | 20 - புதிய தலைவர்கள் |
| 15 | - New Prayer Cells | 15 - புதிய ஜெபக்குழுக்கள் |

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st Sunday-11.00 am (Eng)<br>1st & 3rd Sunday-4.30 pm (Tamil) | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Prayer Cells | Wed/Thu - புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | Ist Friday - வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | IVth Friday - வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

**Magazine Subscription**
Bi -Monthly : Rs.20/-
Yearly : Rs.100/-
Postage : Rs.25/- Extra

**Send Your prayer requests**
**@**
**www.cityrevivalagchurch.org**

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

## PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

Tamil Service - 7.00 a.m, 11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

**ஞாயிறு தோறும்**

தமிழ் ஆராதனை 7.00 மணி, 11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue :** A/c Hall, 1st Floor, JENNE PLAZA,
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

**Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages**

*Come with your friends & family & Receive the blessings of God.*





**Sunday School is conducted for kids below 14 years**




**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org